www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொருளியல்

நேரம் : 3.00 மணி | பகுதி - அ | மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. தனிக் கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை ________.
   அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை
   இ) இயல்புரை அறிவியல் ஈ) நெறியுரை அறிவியல்
2. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?
   அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம் ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறை
   இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள் ஈ) ஒட்டு மொத்த பொருளாதாரத் தொடர்பு
3. கீழ்க்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாகக் கொண்டுள்ளது.
   அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி ஆ) அளிப்பு விதி
   இ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதி ஈ) காலன் விதி
4. சமநோக்கு வளைகோடுகள் ________.
   அ) செங்குத்துக் கோடுகள் ஆ) படுக்கைக் கோடுகள்
   இ) நேர்மறைச் சரிவுடையவை ஈ) எதிர்மறைச் சரிவுடையவை
5. எந்தக் காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது?
   அ) உழைப்பாளர் ஆ) நிலம் இ) தொழிலமைப்போர் ஈ) மூலதனம்
6. கீழ்க்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
   அ) குறை அளிப்பு ஆ) இயங்கும் தன்மையுடையது இ) பலவகைப்படும் ஈ) இயற்கையின் கொடை
7. சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு ________.
   அ) TC/Q ஆ) TVC/Q இ) TFC/Q ஈ) TAC/Q
8. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ________.
   அ) இலாபம் ஆ) மொத்த இ) சராசரி ஈ) இறுதிநிலை
9. முற்றுரிமை போட்டியின் முக்கிய பண்பு ________.
   அ) ஒரே விதமான உற்பத்தி ஆ) விற்பனைச் செலவு
   இ) ஒரு விற்பனையாளர் ஈ) ஒரு வாங்குபவர்
10. விலை பேதம் காட்டுதலின் விளைவு ________ ஆகும்.
    அ) குறைவான உற்பத்தி ஆ) அதிக இலாபம் இ) பல்வேறு விலை ஈ) (ஆ) மற்றும் (இ)
11. பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது எதனுடன் தொடர்புடையது?
    அ) உற்பத்திக் காரணிகள் ஆ) தனிநபர் இ) நிறுவனங்கள் ஈ) வணிகர்கள்
12. "ஒரு உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளி தன் பணியை வழங்குவதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்" - இதைக் கூறியவர் யார்?
    அ) பென்ஹாம் ஆ) மார்ஷல் இ) வாக்கர் ஈ) J.S.மில்
13. இந்தியப் பொருளாதாரம் ________ காரணமாக வலிமையின்மையாக இருக்கிறது.
    அ) பொருளாதாரச் சமநிலையின்மை ஆ) கலப்புப் பொருளாதாரம்
    இ) நகரமயமாதல் ஈ) போதுமான வேலை வாய்ப்பு இருப்பது
14. மக்கள் தொகை அடர்த்தி என்பது ________.
    அ) நிலத்தின் அளவு / மக்கள் தொகை ஆ) நிலத்தின் அளவு / வேலைவாய்ப்பு
    இ) மக்கள் தொகை / குறிப்பிட்ட நில அளவு ஈ) மக்கள் தொகை / வேலைவரய்ப்பு
15. இந்தியாவின் மிகப்பழமையான பெரிய அளவிலான தொழில் ________.
    அ) பருத்தி ஆ) சணல் இ) இரும்பு ஈ) சிமெண்ட்
16. 1956-ன் தொழிற்கொள்கையின் நோக்கம் ________.
    அ) பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது ஆ) வேளாண் துறையை மட்டும் முன்னேற்றுவது
    இ) தனியார் துறையை மட்டும் முன்னேற்றுவது ஈ) குடிசைத் தொழில்களை மட்டும் முன்னேற்றுவது
17. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் ________ அமல்படுத்தப்பட்டது.
    அ) 2017 ஜூலை 1-ந் தேதி ஆ) 2016 ஜூலை 1-ந் தேதி
    இ) 2017 ஜனவரி 1-ந் தேதி ஈ) 2016 ஜனவரி 1-ந் தேதி
18. ஊரகப் பொருளாதாரத்தில் வேளாண்மை பிரச்சனைக்குத் தொடர்புடையதாகக் கருதப்படுவது ________.
    அ) மோசமான தகவல்தொடர்பு ஆ) சிறிய அளவு நில உடைமை
    இ) ஊரக ஏழ்மை ஈ) மோசமான வங்கி செயல்பாடுகள்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



19. தமிழ்நாட்டு உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது?
அ) வேளாண்மை ஆ) தொழில் துறை இ) சுரங்கம் ஈ) பணிகள்
20. Ctrl + M என்ற ஆணை _________ பயன்படுத்தப்படுகிறது.
அ) சேமிக்க ஆ) நகலெடுக்க இ) புதிய நழுமத்தைப் பெற ஈ) நழுமத்தை நீக்க

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14
21. பொருளியல் என்றால் என்ன?
22. விலைத் தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
23. உண்மைச் செலவு - இலக்கணம் தருக.
24. உபரி சக்தி - விளக்குக.
25. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
26. பசுமைப்புரட்சியின் பலவீனங்களைப் பட்டியலிடுக.
27. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன?
28. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?
29. குறைந்த தலா வருமானம் இருக்க காரணங்களாக ராவ் கூறுவதை பட்டியலிடுக.
30. MS Word-ன் முக்கிய அம்சங்கள் யாவை?

## பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21
31. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?
32. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.
33. வெளியுறு செலவு, உள்ளுறு செலவு - வேறுபடுத்துக.
34. அங்காடியின் இயல்புகள் யாவை?
35. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
36. நலப் பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துக்களை எழுதுக.
37. PQLI என்றால் என்ன?
38. விவசாய உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளை விளக்குக.
39. ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகளைக் கூறுக.
40. ஒரு நிறுவனத்தின் மொத்தச் செலவுச் சார்பு $TC = 5 + x^2$ ஆகும். $x = 10$ என்ற அளவில் மொத்தச் செலவினைக் காண்க.

## பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7 x 5 = 35
41. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
*(அல்லது)*
ஆ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.
42. அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.
*(அல்லது)*
ஆ) குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி.
43. அ) நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்குக.
*(அல்லது)*
ஆ) கீன்சின் வட்டிக் கோட்பாட்டை விவரி.
44. அ) காந்தியப் பொருளாதார கருத்துகளை சுருக்கமாக எழுதுக.
*(அல்லது)*
ஆ) இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி.
45. அ) தொழிற் கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை விளக்குக.
*(அல்லது)*
ஆ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை. விவாதி.
46. அ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.
*(அல்லது)*
ஆ) பொருளியல் துறையின் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?
47. அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.
*(அல்லது)*
ஆ) வகைக்கெழு கணித முறையைப் பயன்படுத்த தேவையின் சமன்பாடு $P = 60 - 0.2\,Q$ ஆக இருக்கும்போது (i) $P = 0$ (ii) $P = 20$ (iii) $P = 40$ என்றால் தேவை நெகிழ்ச்சிக் கெழு மதிப்பு காண்க.

******

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com